ID No: 140 - PP

# கொடிகாமம் மத்தி J/327 கிராமஅலுவலர் பிரிவில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில் கிரந்தி எண்ணெய் பாவனை

[1]*Miraaj, V.*, [2]*Rajeetha Miraaj.*, [3]*Sivashanmugarajah, S*
[1]Intern medical officer, Kodikamam Rural Siddha Hospital.
[2]Intern medical officer, Siddha Teaching Hospital, Kaithady.
[3]senior lecturer, Unit of Siddha Medicine, University of Jaffna

குழந்தைப் பருவத்தில் முதல் ஐந்து வருடங்கள் மிகவும் முக்கியமான காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் ஏற்படக்கூடிய பிரதான நோய்களில் கிரந்தியும் ஒன்றாகும். கிரந்தி நோய்க்கு பாலவாகடம், பரராசசேகரம்-பாலரோக நிதானம் போன்ற நூல்களில் கிரந்தி எண்ணெய் பயன்பாடு பற்றி கூறப்பட்டுள்ளது. இன்றும் 'கிரந்தி எண்ணெய்" பாவனை தமிழர்களின் பயன்பாட்டில் உள்ளது. இந்த ஆய்வானது கொடிகாமம் மத்தி J/327 கிராம அலுவலர் பிரிவில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில் கிரந்தி எண்ணெயின் பாவனை பற்றி அறிந்து கொள்ளும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியில் உள்ள ஐந்து வயதிற்குட்பட்ட 67 மொத்த குழந்தைகள் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் குழந்தைகளில் 43.28%(29) ஆனோர் ஆண்களும் 56.71%(38) ஆனோர் பெண்களாவார். குழந்தைகளில் 86.56%(58) ஆனோர் குழந்தைகளிற்கு 41ஆம் நாளிலிருந்தே கிரந்தி எண்ணெய் பயன்படுத்துகின்றனர். குழந்தைகளில் 88.05%(59) ஆனோர் வைத்திய ஆலோசனைப் படியும் 11.94%(8) ஆனோர் வைத்திய ஆலோசனையின்றியும் கிரந்தி எண்ணெய் பயன்படுத்துகின்றனர். மேலும் கிரந்தி எண்ணெயினை 68.65%(46) ஆனோர் அரச சித்த வைத்தியசாலைகளிலும் 19.40%(13) தனியார் (பரம்பரை) வைத்தியசாலைகளிலும் 11.94%(8) ஆனோர் தாமாக கிரந்தி எண்ணெயினை தயாரித்தும் பயன்படுத்துகின்றனர். 1 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் கிரந்தி எண்ணெய் பாவனை அதிகமாக 32.83%(22) உள்ளது. ஒவ்வொரு நாட்களும் கிரந்தி எண்ணெய் பயன்படுத்திய குழந்தைகளில் 71.64%(48) ஆனோர் கிரந்திநோயால் பாதிக்கப்படவில்லை. தரம் 10ற்கு குறைவான கல்வித்தகைமை உள்ள தாய்மாரின் குழந்தைகளுக்கு கிரந்தி நோய்ப்பாதிப்பு 23.88%(16) அதிகமாக உள்ளது. தரம் 10ற்கு மேற்பட்ட கல்வித்தகைமை உள்ள தாய்மாரின் குழந்தைகளுக்கு கிரந்திநோய்ப்பாதிப்பு 76.11%(51) குறைவாக உள்ளது. ஆய்வின் முடிவுகளின்படி குழந்தைகளில் கிரந்தி எண்ணெயின் பாவனை 100%(67) உள்ளது என்பதும் இதன் பயன்பாடு குழந்தைகளுக்கு ஏற்படும் கிரந்திநோயின் தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதும் முடிவாகின்றது.

**திறவுச்சொற்கள்** - கிரந்தி எண்ணெய், குழந்தை மருத்துவம், பாலவாகடம்



Scanned with CamScanner